29

JAN 1941

25358

REGD. No. M. 291

ஆரியதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
அறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்ரம- ஹு கார்த்திகை மீ 20உ 1940-ஹு டிஸம்பர்-மீ 5உ | லு-47

வாரக்குறிப்புகள்

ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா

முற்றிலும் ஏற்றவரே!! ஸ்ரீவெங்கடேச்வர கலாசாலைக்கு ஸ்ரீவெங்கடேச தீக்ஷிதர்வாள் தலைவராக்கப்பட்டு ஸ்திரமாகச் செய்தது மிக்க நியாயமே! உயர்ந்த குலம்! விசால புத்தி! சிறந்த படிப்பு! அழகான வாக்ஜரி! ஸர்வகலாசாலையானபின் தலைமை கொடுக்கவே இத்தனை நாள் தாமதமோ?

பாட்னாவிலும் மாணவர் துடுக்கு!! இளங்கன்று பயமறியாது. தலைவர் கைதியானபின் போலீஸாரை அடித்தது.ஸத்யாக்ரஹத்திற்கும் காந்திஜிக்கும் பலஹீநமும் வெட்கமுமாம்!!

கடவுள் தூங்கவில்லை!! நேரு கஸ்தூரிபாய் பேச்சில் இவ்வளவு தர்மமாகதாங்கள் பாடுபட்டும் ஸ்வராஜ்யம் கிட்ட கடவுள் அருளில்லையே என்றதற்கு நேரு கடவுள் தூங்குகிறார் என்றாராம். தூங்கவில்லை! இவர்களது தாமஸதர்மத்தால் ஸ்வராஜ்யம் கிட்டவிட்டாததுடன் தக்க சிக்ஷையுமளிக்கிறார்!!

அன்புடன் நடக்குமா? சென்னையில் பிச்சைக்காரர் சட்டம் விரைவில் அமுலுக்கு வருகிறது. ஏழைகளிடம் போலீஸார் அன்பாகநடத்தமேலதிகாரிகள் வற்புறுத்தலவச்யமாகும்!

வேத வித்தைக்குதவலாகாதா? வடாற்காடு எசையானூர் கோகிலாம்பாள் எனும் தார்மிஷ்டை ஆங்கில கல்விக்கு ஓர் கட்டடம் கட்டியளித்தாள். குரு பக்தையும் தார்மிஷ்டையுமான அவள் செல்வம் வேதவித்தைக்கே செல்வது நியாயம்.

முயற்சி பலிக்குமா? சென்னையிலுள்ள ஆங்கில வர்த்தகர் கை, சண்டையால் கட்டப்பட்டிருக்கிறது. நாளுக்கு நாள் ஸத்யாக்ரஹம அதிகமாவதற்கு வருந்துபவர் போல் ரஹஸ்யமாக இங்கிலாந்திற்குஎழுதி ஸமரஸமுண்டுபண்ண முயற்சிக்கின்றனர். எப்படியானுலென்ன? நாம் வேண்டுவது அமைதியே!

கவனிப்பாரா? மாஜி நிர்வாஹ மெம்பர் ராஜப்ரதிநிதிக்கு ஸமரஸமுண்டுபண்ண ஓர் கமிட்டி நியமிக்கும்படி யோசனை கூறுகிறார். விக்ஞான நிபுணர் ஆசார்ய ராதாகிருஷ்ணன் பாட்னாவில் முறையிட்டார்? அமெரி புத்தியில் இது ஏறுமா?

தார்மிகர்களை நினைக்கவும்! கல்கத்தாவில் ஒருவர் மஹாபாரதமனைத்தும் இலவசமாக அளித்தார். அவர் பெயர் ப்ரதாபசந்த்ரராய் சென்ற மன்மதஹு, கபிஸ்தலம் துரைசாமி மூப்பனார் பல ஆராய்ச்சிகளுடன் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை ஒட்டி 300 பக்கங்கொண்ட தமிழ் கீதையை இயற்றி இலவசமாக அளித்தார். ஆக்ராவில் சுக்ல யஜுஸ் ஸந்த்யா சிராவண விதி முதலியவைகளை இப்போதும் இலவசமாக அளிக்கின்றனர்.

எனது நன்றி!! அப்படி முடியாமல் மத நூல்களை எல்லோரும் படிக்கும்படி அபூர்வமானவைகளை அச்சிட ஸ்ம்ருதிபுராணங்களுடன் நம்மால் முடியாதென ஓய்ந்து விட்டேன். இச்சமயம் ஸ்ரீதேவி பக்தர்ஸ்ரீமான் புரசைநாராயணசாமிய்யர் M. A. கீதையை வெளியிட முன்வந்தார். வியாபாரதோரணையில்லாமல் 110 பக்கங்கொண்ட தமிழ் ஸ்ரீ கீதாஸாரமும் பாத்மபுராண கதைகளும் என்பதை அணா 6க்கே கொடுக்க முன்வந்ததற்கு நன்றி பல.

ஸ்ரீ ஹ்ருஷிகேச சிவானந்தர் ஸ்ரீ முகம் தெய்வநெறிக்கழக மாகாண ஸபை நடத்திய ஸ்ரீமான் V. S. மணி அவர்கள் மூலம் ஸ்ரீ ஸ்வாமிகள் ஓர் அரிய ஸ்ரீமுகம் அநுக்ரகித்தார். காஞ்சி ஸ்ரீ கீதாமடம் நைஷ்டிக பிரும்மசாரி ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் ஓர் அபிநந்தனமும் மணி முகவுரையும் தந்துளார். அனைவருக்கும் நன்றி.

பம்பாய் மதுவிலக்கு இறந்தது

சாராய விளம்பரத்தடை ரத்து

பம்பாயில் காங்கிரஸ் மந்திரிகள் செய்த மதுவிலக்கு உத்திரவு செல்லாதென்று ஹைகோர்ட் தீர்ப்பு ஏற்பட்டபிறகு அங்கு கள், சாராய விற்பனைகளுக்குத் தடையில்லையாகையால் மதுவிலக்கு அடியோடு முறிந்துவிட்டது. இத்துடன் அங்கு சாராய விளம்பரங்களுக்கு இருந்துவந்த தடையையும் தற்கால கவர்ன்மெண்டார் ரத்து செய்துவிட்டனர்.

புதிய வரி அமுலுக்கு வந்துவிட்டது

கவர் விலை ஒன்றே காலணு! புக்போஸ்ட்களுக்கு முக்காலணு

இந்தியா சட்ட சபையால் நிராகரிக்கப்பட்ட வரிமசோதாவானது ராஜாங்க ஸபையில் நிறைவேறிவிட்டது. வைஸ்ராய் சம்மதத்துடன் அது டிஸம்பர் 1உ முதல் அமுலுக்கு வந்துவிட்டது. இனி கவர் விலை ஒன்றே காலணு. புக் போஸ்ட்களுக்கு முக்காலணு. தந்தி டெலிபோன் கட்டணங்களும் உயர்த்தப்பட்டிருக்கிறது. வருமான வரியும் ஸர்சார்ஜ் செய்யப்படும்.

ஏன் கலைக்கக்கூடாது?

கடலூர் முனிஸிபல் ஸபை நிர்வாஹம் ஒழுங்காயில்லையாகையால் அதை ஏன் கலைத்துவிடக்கூடாதென்று சென்னை கவர்ன்மெண்டார் கேட்டிருக்கின்றனர்.

இந்திய ராஜீய நெருக்கடி

பம்பாய் வியாபாரிகளின் ஸமரஸ கோரிக்கை

பம்பாய் வியாபார ஸங்கத்தின் முக்கிய கூட்டமொன்று நடந்தது. இந்திய ராஜீய நிலைமையின் நெருக்கடியால் வியாபாரம் மிகவும் பாதிக்கப்படுவதாயும் ஆதலால் காந்தியுடனும் காங்கிரஸுடனும் உடனே சமரசம் செய்துகொள்ள வேண்டுமென்றும், உடனே குடியேற்ற நாடு அந்தஸ்து வழங்குவதாக உறுதி கூறவேணுமென்றும் ஓர் தீர்மானம்செய்து அதை வைஸ்ராயிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

ஸுபாஷ் போஸ் பட்டினி

வங்காளச்சிறையிலிருக்கும் ஸ்ரீமான் ஸுபாஷ் சந்திரபோஸும் வேறு சில ராஜீயக்கைதிகளும் உபவாஸஹடம் ஆரம்பித்திருக்கிறார்கள். ஜயிலில் அவர்கள் நன்றாக நடத்தப்படவில்லையென்று புகார் கூறப்படுகிறது.

தார்மிக ஹிந்துக்களுக்கு வேண்டுகோள்

(ராவ்சாகேப் N. நடேசய்யர்)

நான் சொல்லும் விஷயங்கள் உலகத்தின் க்ஷேமத்திற்காக மனித வர்க்கத்தில் ஒருவனாகவும் அறுபத்தைந்து வயதின் அனுபவம் நிரம்பியவனாகவும் சொல்லுகிறேன். அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தின் காரிய நிர்வாகத்தலைவன் என்னும் முறையில் மாத்திரம் அல்ல. கொஞ்சம் கவனமாக கேட்டுப்பாருங்கள்.

பரத கண்டத்தின் தற்கால நிலை

ஐரோப்பாவிலும் மற்ற இடங்களிலும் நடந்து வருகிற பெரியயுத்தம வெளிப்படையாகவும் நேருக்குநேராகவும் உடல் வலியும் படை வலியும் கொண்டு செய்யப்படுகின்றது. எண்ணுதற்குமறிய காலமுதல் பாரத தேசத்தின் பெருமைக்குரியதான வேத நெறி ஆசார அநுஷ்டானங்களை உருக்குலைத்தும், ஹிந்துக்களின் தன்மையைக் கெடுத்தும் கொடுமையாகவும் குரூரமாகவும் திருட்டுத்தனமாக உள்ளூற இன்று செயல் புரியப்பட்டு வருகின்றது. இன்னும் மிகத் தீமையான அம்சம் என்னவெனில் ஐரோப்பியயுத்தம் பல தேசத்தாருக்குள் நடந்துவர, இங்கு நம் தேசத்தாரே உள்ளூரப் புகுத்துவிட்டு நடத்துவதாகவும் அதை நடத்தும் இந்திய மக்களிற் சிலருடைய கொடிய செய்கைகளால் அந்நிய அரசாட்சியினால் ஏற்படக்கூடிய துன்பத்தைக் காட்டிலும் பல மடங்கு துன்பத்தினால் இந்தியர்கள் மனமும் உடலும் மடிந்து வருகிறார்கள்.

ஹிந்து தர்மத்தின் [வைதிகதர்மம்] மேன்மையையும் அது உலக முழுவதுக்கும் செய்யக்கூடிய உண்மைத் தொண்டையும் உயர்த்திப்பேசிக்கொண்டு, தாங்களும் ஹிந்து சமூகத்தினர் என்று வேஷம்போட்டுத் திரியும் சில ஸ்தாபனங்கள், ஹிந்து ஸம்ஸ்திதியையும் ஹிந்து தர்மத்தையும் வேரோடு அறுத்துக்கொல்ல ஆரம்பித்திருக்கின்றன. ஹிந்து ஸம்ஸ்திதியாகிய கோட்டைக்கு பிரதான மதிலாக விளங்குவது வர்ணாச்ரம தர்மம். உலகம் முற்றிலும் உள்ள அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களெல்லாம் இந்த தர்மத்தைப் போற்றிப் புகழ்ந்து வருகிறார்கள். ஆனால் சென்னை மாஜி பிரதம மந்திரி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் சமீபத்தில் "ஒரு காலத்தில் ஜாதி முதலான பிரிவினைகளுக்குப் பொருள் இருந்தது. அவைகள்சில உபயோகமும் ஆகிவந்தன. இப்பொழுது இந்தப்பிரிவினைகளுக்கு அர்த்தமில்லை அவைகள் பெரியவன் சிறியவன் என்ற உணர்ச்சியை உண்டாக்கி வித்தியாஸங்களை திடப்படுத்த ஹேதுவாகின்றன. ஹிந்து முஸ்லீம், கிறிஸ்தவர் என்ற பிரிவினைகளை விட்டொழிக்கவேண்டும்" என்றுகூறியுள்ளார். இது போன்ற குரூரமானதும் முழுப்பொய்யானதும் விபரீதமானதும் ஹிந்துத்வதுரோகமானதுமான வாக்கியம் புண்ணிய பூமியாம் பாரத தேசத்தில்- மஹரிஷிகள் தோன்றிய நாட்டில் பிறந்த ஓர் உண்மை ஹிந்து கூறக்கூடியதா? இதனாலும் ஹிந்து சமூக வாழ்க்கையில் மிகவும் உயர்ந்த அம்சங்களாகக் கொண்டாடப்பெறும் விவாஹக்கிரமம், கோவில் வழிபாடு முதலானவைகளைப்பற்றி இதுபோல் பேசப்படும் பல பேச்சுக்களாலும் உங்கள் ரத்தம் கொதிக்கவில்லையா? அப்படிக்கிருந்தும் இத்தகையாருடையவும் இவர் தோழர்களுடையவும் குடிகெடுக்கும் கொடுந்தொழில்களில் அன்புவைத்தும் ஆதரவு காட்டியும் தங்கள் நினைவையும் செயலையும் வீணாக்கிவரும் ஜனங்களும் இருக்கிறார்களே! ஏன்?

இவர்களும் இவர்களது ஸ்தாபனங்களும் ராஜீயத்துறையிலும் பொருளாதார வழியிலும் ஏதோ சில நன்மைகள் செய்து விட்டதாகப் பறையடித்துத் திரியும் பசப்பில் மயங்கி இந்தியர்கள் சிலர் இருப்பதனால் தான். ராஜ்யத்திலும் பொருளாதாரத்திலும் ஸ்வாதந்தரியம் கிடைத்து விடுவதனால் மட்டும் நமக்கு ஸ்வராஜ்யம் கிட்டியதாக ஆகாது. ஸ்வராஜ்யம் என்பதற்கு இவைகளைக்காட்டிலும் முக்கியமான அம்சம் ஒன்றுளது அதுதான் நம் சமூக வாழ்க்கையிலும் நம் மதத்திலும் நமக்கிருக்க வேண்டிய ஸ்வாதந்தர்யம். நாஷனல் காங்கிரஸ், ஹிந்து மஹாசபை, ஹிந்து லீக், தென் இந்திய லிபரல் பெடரேஷன் இவைகளில் ஏதேனும் ஒன்று இந்த விஷயத்தில் ஏதேனும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா? அல்லது சாதித்திருக்கிறதா? இல்லவே இல்லை அது மட்டுமல்ல. நம் வாழ்க்கையை அழித்துவிட இவைகள் குரூரத்துடன் முயன்று வருகின்றன. ஹிந்துக்களின் நன்னிலையை அழிக்கப் போர் புரியும் ஆரவாரங்கள் ஆகாயத்தை அளாவி அனவிரதம் ஒலிக்கின்றன. தார்மீக ஹிந்துக்கள் இனியும் செயலற்று இருக்கலாமா?

நம் முன்னிற்கும் வேலை

எதிரிகளின் பேச்சிற்கு எதிர் பேச்சும், குயுக்திகளுக்கு சாஸ்த்ரீய சமாதானங்களும், உழைப்பிற்கும் உழைப்பும் வைத்து எதிர்க்கவேண்டும். உண்மை அறிவை ஊட்டக்கூடிய துண்டு பிரசுரங்கள் வெளியிட்டும் பட்டணங்களிலும் கிராமங்களிலும் தொடர்ந்து நெடுகிலும் சென்று நம் சங்கத்தின் கிளைகளும், தார்மீக யுவர் சங்கங்களும் ஆஸ்திக ஹிந்து மாதர் சங்கங்களும் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். பொதுக்கூட்டங்கள், மஹாநாடு கூட்டி, அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கக் கோட்பாடுகளை நம் தேசம் முழுவதும் பரவச் செய்து அவைகளை மக்கள் உணரச்செய்ய வேண்டும. இதன் பொருட்டு தியாக சிந்தனையுடன் உத்ஸாஹத்தோடு உழைப்பவர்களும், நுண்ணிய அறிவோடு இந்த சங்கத்தின் திட்டங்களுக்கும் வரம்புகளுக்கும் கட்டுப்பட்டு நடந்து இவைகளைப் பரப்புவதற்கென்று தயாராகும் அறிஞர் கோஷ்டி ஒன்று அல்லும் பகலும் இந்த வேலையைச் செய்பவர்களால் நிறைந்து விடாமுயற்சியுடன் பாடுபடவேண்டும். நாம் அடைய வேண்டிய ஸ்வராஜ்யத்தின் தன்மையை நன்றாக விளக்கியும், ராஜீயத்தையும் பொருளாதாரத்தையும் இன்னும் தெளிவாக்கியும், ஊர்ஜிதப்படுத்தியும் ஜனங்களுக்கு எடுத்து சொல்லவேண்டும். ஊர்கள் தோறும் ஸநாதனதர்ம வித்யாலயங்கள் நிறுவப்படல் வேண்டும். இவ்விதம் திட்டமிட்டு போதுமான வேலை செய்யாததினால் தார்மீக ஹிந்துக்களுக்கு வெகு காலத்திற்கு முன்னமேயே கிடைத்திருக்கக்கூடிய வெற்றியும் தடைப்பட்டு மற்ற ஸ்தாபனங்களும் முற்போக்கை அடைய நேரிட்டது.

திருவண்ணாமலை மஹாநாடு

இந்தக் குறைகளை நீக்கிக்கொள்ள அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தார் தீர்மானித்துள்ளார்கள். அதன் பொருட்டு சென்னை மாகாண வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தின் நாளது வருஷத்திய மஹா சம்மேளனம் 1940௵ டிஸம்பர்௴ 9, 10, 11 தினங்களில் திருவண்ணாமலையில் சென்னை ஸ்ரீமான் ஸேட் புருஷோத்தமதாஸ் கோகுலதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. தார்மீக ஹிந்துக்கள் எல்லோரும் இதில் கலந்து கொண்டு நடத்திவைத்து, நம் தாய்நாட்டின் மேன்மையையும் பெருமையும் ஓங்கி இந்த பூமியில் தழைக்கும் புண்ணிய வசத்தால், உலகமுழுவதும் அமைதியும் செல்வமும் அடைந்து வாழ, உதவவேணுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஏகாதசி உபன்யாசம்

கும்பகோணம்

26—11—40 தேதி செவ்வாய்கிழமை கும்பகோணம் மேட்டுத்தெரு அக்ரஹாரத்திலுள்ள ஸ்ரீ செங்கழனீர் விநாயகர் ஆலயத்தில் ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாளின் ஆஞ்ஞைப்பிரகாரம் ஏகாதசியை முன்னிட்டு ருக்மணி கல்யாணம் ராஜா வேதபாடசாலை தலைமை உபாத்யாயர் ஸ்ரீ வாஞ்சியம் பிரும்மஸ்ரீ எஸ். எம். சாமிநாத சாஸ்திரிகளால் உபன்யாசம் நடை பெற்றது. ஸ்ரீ கிருஷ்ண பகவான் படத்திற்கு துளசிமாலை சாத்தி கடைசியில் துளசி தள பிரசாதம் கதாஸ்ரவணம் செய்தவர்களுக்கு கொடுக்கப்பட்டது. (ந-நி)

ஸ்ரீ ஹிந்து தர்ம ஸித்தாந்த சபை

(சென்னை கிளை ஸ்தாபனம்)

சென்ற விக்ரம-௵ கார்த்திகை-௴ 2-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை தினம் மாலை 3 மணிக்கு ௸ சபையின் கிளை ஸ்தாபனத்தை ஸ்ரீமான் உ. வே. காண்டூர் வித்வான் ராமானுஜாசாரிய சுவாமிகள் சென்னை ஸ்ரீ வரதாமூர்த்தியப்பன் வீதியில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ வரதாராஜமனவாள மாமுனிகள் சன்னதியில் (புது உடையவர் ஸன்னதி) ௸ சபையை ஆரம்பித்து வைத்தார் அப்போது ஸ்ரீமான் உ. வே. வீ. பாஷியம் அய்யங்கார் சுவாமிகள் (ரிடயர்ட் ஹைகோர்ட் ஜட்ஜி.) தலைமை வஹித்தார் அச்சமயம் பிரதி ஆதிவாரம் மாலை 3-மணிக்கு மேல் ௸ சபையின் ஆதரவில் ஸ்ரீமான் உ. வே. வித்வான் ராமானுஜசாரிய சுவாமிகளைக் கொண்டு ஸ்ரீமத் ராமாயணம் உபந்நியாஸம் செய்யும்படியும். பிரதிதினம் மாலை 3-மணிக்கு மேல் சத் உபந்நியாஸங்களை செய்யும்படியும் ஏற்பாடு செய்து ௸ சுவாமிகளால் உடனே ஸ்ரீமத் வால்மீகி ராமாயணமும் அநேக ஜனங்கள் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டு வெகு கனவான்கள் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டார்கள். பிறகு கோவிந்தநாம ஸங்கீர்த்தனம் சொல்லப்பட்டு கூட்டம் கலைந்தது. ந-நி

ஸத்யாக்ரஹ இயக்கம்

காந்திஜி ஆரம்பித்துள்ள தனிப்பட்ட நபர் ஸத்யாக்ரஹ இயக்கமானது பல மாகாணங்களிலும் பரவி வருகிறது. மந்திரிகளாயிருந்தவர்களும், சட்டஸபை மெம்பர்களும் பல விடங்களில் ஸத்யாக்ரஹம் செய்து சிறை தண்டனை அடைந்தனர் பம்பாய் பிரதமந்திரி ஸ்ரீ கெர். மத்யமாகாண பிரதம மந்திரி ஸ்ரீ பந்து போன்ற பிரபலஸ்தர்கள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப் பட்டனர். டாக்டர் ராஜனுக்கு வருஷக் கடுங்காவலும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இன்னம் பலர் சிறை சென்ற வண்ணமாயிருக்கிறது.

வாலிவதம்

(குலபதி பி. எ. சுப்பிரமணிய அய்யர் திருவல்லிக்கேணி)

வாலி வதத்துக்கு ஓர் சாக்ஷியம். ஸ்ரீ ராம ராமரது பாணத்தால் அடிப்பட்டு வாலி தரையில் விழுந்து கிடப்பதாகக் கேள்விப்பட்டு, தாரை அங்கதனுடன் ஓடிவருகிருள். வழியில் தனக்கெதிராக வானரர்கள் ஓடிவருகிருர்கள். அவர்களைப்பார்த்து ஏன் இவ்வளவு பயப்பட்டு ஓடிவருகிறீர்கள்? என்று வினவுகிருள். அவர்கள் சொல்லும் பதில் பின்வருமாறு:

"யமனே ராமனது உருவத்தை எடுத்து வந்து வாலியைக் கொன்ருன்." 'க்ஷிப்தான் வ்ருக்ஷான்......" அதாவது, வாலி எறிந்த பெரிய விருக்ஷங்களையும், மலைகளையும் ஸ்ரீ ராமர் தமது பாணங்களால் பிளந்து வாலியைக் கொன்ருர்."

இந்த பதிலை நாம் ஆலோசிக்க வேண்டும். க்ஷிப்தான் (கிஷ்கி. காண். 19-ம் ஸர்க். 12-ம் ச்லோ) என்ற பதத்துக்கு 'வாலி ப்ரஹிதாந்' அதாவது 'வாலியால் எறியப்பட்ட என்று திலகர் வ்யாக்யானம் செய்திருக்கிருர.

டீகா சிரோமணியிலும் இவ்விதமே அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. வாலி எறிந்த விருக்ஷங்கள் முதலானவைகளைப் பிளந்தது யார்? சுக்ரீவன் தான். இதற்கு ஆதாரங்கள் என்ன? 16ம் ஸர்க்கம் "வ்ருக்ஷை:" என்ற 28ம் ச்லோகமும் 'ததோ தனுஷி ஸந்தாய' என்று ஆரம்பித்து (33ம் ச்லோ) 'ராகவேண மஹா:பாணோ...(35ம் ச்லோ) என்று முடியும் ச்லோகங்களும். ஆகிய இந்த வால்மீகிவாக்யங்களும், 'ஏகே நாஹம் பரமோக்ஷ்யாமி பாண மோக்ஷண ஸம்யுகே' அதாவது "யுத்தத்தில் என்னுடைய ஒரே பாணத்தால் வாலியின் பயத்தையும், பகையையும் தொலைத்து விடுகிறேன்," என்று பிரபு சொல்லும் வாக்கியமும் (14ம் ஸர். 11ம் ச்லோ) ஆயினும் ஏன் ஸ்ரீ ராமர் பிளந்தார் என்று வானரர்கள் சொன்னுர்கள்? சண்டை நடந்த இடத்தில் இல்லாமல் தூரத்தில் அவர்கள் நின்ற காரணத்தால் தான். ஸ்ரீராமர் தான் என்று சொன்னதற்கு என்ன காரணம்? சுக்ரீவனும் ஸ்ரீ ராமரும் மிகவும் நெருங்கி ஒருவருக்கொருவர் பக்கத்தில் நின்றதால் தான். இதினின்றும் நாம் ஊஹிக்க வேண்டியது என்ன? பாணம் போட்ட காலத்தில் ஸ்ரீராமர் வாலிக்கு நேரே எதிரில் நின்ருர் என்பது தான்.

டீக்காவ்யாக்யானத்தின் ஸாராம்சம்.

டீகாசிரோமணிவ்யாக்யாதா ஸந்தேகமின்றி தெளிவாக ஸ்ரீராமர் வாலியை மறைந்திருந்து அடிக்கவில்லை, நேரில்யுத்தத்திலே தான் கொன்ருர் என்று எழுதியிருக்கிருர்.

வருகைக்ஷ: ஆத்மானம் ஆவ்ருத்யஎன்பதற்கு, மூன்று விதமாய் அர்த்தம் செய்கிருர் 12ம் ஸர்க்கம் 14 ம் ச்லோகத்தில் 'ஆவ்ருத்ய' என்ருல் "உபகூஹ்ய" அதாவது 'மரங்களை அணைத்துக் கொண்டு' என்றும், 14ம் சர்க்கம் 1ம் ச்லோகத்தில் 'வெயிலிற்காக மரங்களால் மறைக்கப்பட்டவர்களாய் மரத்தடியில் நின்ருர்கள்' என்றும் 18ம்சர்க்கம் 44ம்ச்லோகவியாக்யானத்தின் மத்தியில், "அடர்ந்த மரங்களால் தன்னை மறைத்துக்கொண்டு நிற்கும் கிஷ்கிந்தையை அடைந்து அங்கு நின்றனர்" என்றும் பொருள் கூறுகிருர்.

18ம் சர்க்கம் 44ம் ச்லோகத்துக்கு வ்யாக்யானத்தின் முடிவில், கிஷ்கிந்தையிலிருந்து சண்டைக்காக வெளிவந்த வாலி ஸ்ரீராமருடைய அருகாமையிலிருந்த சுக்ரீவனைக்கண்டான் என்று கொள்வதே ஒட்டும் என்று சொல்லுகிருர்.

பராங்முகவதம் (17ம் சர்க்கம்) என்ற இடத்தில் ஸ்ரீராமரும் சுக்ரீவனும்ஐக்யமாகி சேர்ந்தே யுத்தம் செய்கிருர் என்றுதெரிந்து கொள்ளாமல் தன் அஞ்ஞானத்தால் அது ஸ்ரீராமருடைய சண்டையல்லஎன்று சொல்லுகிருன்.

17ம் ஸர். 48ம் ச்லோகத்தில், த்வயா,த்ருச்யேன என்றே பாடத்தைக் கொள்ளுகிறேன். 'அத்ருச்யேன' என்று கொள்ளவில்லை ஆகையால் 'பார்க்கப்படாமல் நின்ருர்' என்ற சந்தேகத்துக்கே இடமில்லை.

18-ம் ஸர் 39-ம் ச்லோகத்தில் மாம்ஸத்தை உத்தேசித்து மனிதர் வேட்டையாடுகின்றனர் என்ற பொதுச்சொல் சொல்லப்பட்டது. அடுத்த ச்லோகத்தில் 'தர்மம் தெரிந்த ராஜரிஷிகளும் வேட்டையாடுகிருர்கள்' என்று சொல்வது, தம்மைப்போன்ற ராஜரிஷிகளின் வேட்டை அதர்ம சிக்ஷணத்திற்காகவே என்று ஸ்ரீராமர் விளக்குகிருர். 'வானரமாம்ஸம் அயோக்யம்' என்ற கேள்வியே இங்கு எழவில்லை. மேலும் இந்த 40-ம் ச்லோக வியாக்யானத்தில் ஸ்ரீராமர் ஸ்பஷ்டமாய் 'உன்னை நான் யுத்தத்திலேயே கொன்றேன்' என்றுரைக்கிருர். 'நீயும் மிருகமாதலால் வேட்டை மூலம் உன்னை சிக்ஷை செய்ய வேண்டுமாதலால் நீ உன் மதப்படி என்னை எதிர்க்கவில்லை என்று வைத்துக் கொண்டாலும் ஸரி, அல்லது, சுக்ரீவனை எதிர்க்கும்போது என்னையும் எதிர்த்தாய் என்று வைத்துக் கொண்டாலும் ஸரி, உன்னை நான் யுத்தத்திலேயே தான் பாணம் போட்டுக் கொன்றேன்', என்று பொருள் கூறுகிருர்.

17-ம்ஸர்க்கத்தில் வாலிசொன்ன மொழிகள் ஸ்ரீராமரை நிந்திப்பதற்காக சொன்ன மொழிகள் என்று இந்த வ்யாக்யாதா கொள்ளவில்லை. இங்குள்ள விசேஷணங்களில் சில சுக்ரீவனை நிந்திப்பவைகளாகவும் மற்றவை ஸ்ரீராமரை ஸ்தோத்ரம் செய்பவைகளாகவும் கொண்டு அர்த்தம் செய்கிருர். 'இப்படிப் பட்ட பரமாத்வாவன நீ இவ்வளவு நீசனுன சுக்ரீவனோடா சேர்ந்தாய் என்று வ்யாக்யானத்தின் போக்கு. இவ்விதம் வாலி பேசுவது ஸ்ரீராமன் சுக்ரீவனோடு தர்ம ஸக்யம் செய்திருக்கிருர் என்பதை அறியாததால் தான். (இந்த ஸாராம்சத்தை எனக்கு எழுதி உதவியவர் மஹேச்வரதீர்த்த வ்யாக்யான ஸாராம்சத்தை எழுதி உதவிய மஹான் தான்.)

IN MEMORIAM.

H. H. Sir Sri Krishnarajendra Wadiyar Bahadur, G. C. S. I., G. B. E.

"A model man, a model King" so chime
The anguished folk from climes afar and near!
Princes royal, peasanty low, burst into tear
That life more precious was ne'er cut in prime.
Like Bhoja Great he stinted naught for arts and rhyme,
Who held in fee the pandit ranks and pir
Who saw but rendered not his love and fear
As unto the Avtar of Dwapar time?
To Mount Kailas where Siva dwells he went
Years ago, as only gods have gone of old,
Returned with heavenly grace and deep content.
The wondering West has seen his dharmic mould,
No change of place its hold on him relent—
I've flowers for him, tear-stained, but rich as gold!

Madhugiri, 1940. Agnihotri,
S. SRINIVASAN.

டெல்லியில் ஸ்திரீகள் கூட்டம்.

விவாகரத்து வேண்டுமோம்.

அகில இந்திய சீர்திருத்த ஸ்திரீகளின் கூட்டமொன்று டெல்லியில் நடைபெற்றது திருவாங்கூர் மஹாராணி அதற்காக டெல்லி வந்து அநுக்ரஹம் செய்தார்.

அந்தக் கூட்டத்தில் ஸ்திரீகளுடைய உரிமைகளைப்பற்றி மனம் போனபடியெல்லாம் பேச்சும் தீர்மானமும் நடந்தது. விவாஹரத்து வேண்டுமென்றும், விவாஹங்களை கட்டாய முறையில் ரெஜிஸ்தர் செய்ய வேணுமென்றும் ஏகாதார முறைச்சட்டம் வேணுமென்றும் புருஷர்களுக்கு ஸமமான மற்ற உரிமைகள் கொடுக்கவேணுமென்றும் தீர்மானிக்கப்பட்டதாம்.

உ

சென்னை மாகாண
வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க
மஹாநாடு.

திருவண்ணாமலையில்

டிஸம்பர், 9. 10. 11உகளில் நடைபெறும்

12உ மஹா தீபம்.

பிரதிநிதிகளின் ஜாகை:—
தனிக்கோடி முதலியார் கிரஹம், வடக்கு வீதி.

வருக! வருக!

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஹூ கார்த்திகை-மீ 20வ

சீர்திருத்த ஸ்திரீகளின் துர்ப்புத்தி

டெல்லியிலும், நமது மகாணத்தில் கரூரிலும் சீர்திருத்த வாதி ஸ்திரீகளின் கூட்டங்கள் சென்ற வாரம் நடைபெற்றன. அதில் அவர்கள் ஹிந்துமத, ஸமூஹ வாழ்க்கைகளின் அடிப்படையான தத்வங்களுக்கும் குடும்ப வியவஸ்தைக்கும், ஸ்திரீகளின் கண்ணியத்திற்கும் விபரீதமாயுள்ள பல தீர்மானங்களைச் செய்திருக்கிறார்கள். புருஷர்களுடன் ஸம உரிமை, விவாஹ ரத்து, பால்ய விவாஹத் தடை, ஆலயப்பிரவேச ஆதரவு போன்ற பற்பல விஷயங்களைப்பற்றி மிக்க விபரீதமான பேச்சுக்களும், தீர்மானங்களும் அங்கு செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது பலதார விவாஹ விஷயமாயும் நவீன ஸ்திரீகளின் புத்தி வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது.

இந்த சீர்திருத்த ஸ்திரீகளின் துர்ப்புத்தியைக் கண்டு ஹிந்து ஸமூஹ அபிமானிகளான விவேகிகள் துக்கப்பட வேண்டியிருக்குமென்பதில் தடையில்லை. சீர்திருத்த ஸ்திரீகள் அயல்நாட்டு அநாகரிகத்திற்கு அடிமைப்பட்டதாலேயே, தனது மத ஸமூஹ ஆசாரங்களில் நம்பிக்கை யிழந்து நிற்கிறார்கள். சில வருஷங்களுக்கு முந்தி இத்தகைய விபரீதக்கொள்கை இருப்பது ஸஹஜமாயினும் இன்று உலகமுள்ள நிலைமையில் ஹிந்து ஸ்திரீகள் இத்தகைய துர்ப்புத்திபெற நியாயமேயில்லை. இந்து ஸ்திரீகளை பாழ்படுத்திய அன்னிய நாகரீகம் இன்று எந்த நிலைமையில் இருக்கிறது? அது உலகத்தாரின் கண்முன் தலை குப்புறவிழுந்து மண்ணை கவ்வ ஆரம்பித்துவிட்டதை மேற்றிசையாரே வாய்விட்டு ஒப்புக்கொள்ள ஆரம்பித்துவிடவில்லையா? பிரமாணமோ, தர்மமூலமான வியவஸ்தையோ இல்லாமல் அங்கு, தான் தோன்றித்தனமாக ஸ்திரீகளைத் தெருவில் விட்டதன்பயனை இப்போது அவர்களே உணர்ந்து வருந்துகிறார்கள். ஆதலால் சீர்திருத்தத்தின் விபரீத பலன் வெளிப்பட்டபிறகுகூட இந்து ஸ்திரீகள் இன்னும் கண்மூடித்தனமாக இந்து மத ஸமூஹ அமைப்பைக்குலைக்க முயற்சிப்பது ...ம நாசத்திலேயே முடியுமென்பதை ...கள் உணராதது வருந்தத்தக்கது.

ஹிந்து மதமானது மிக்க அநுபவ பூர்வகமாகவே ஸ்திரீகளின், உரிமை, தர்மம், ஆசரணை ஆகிய பல அம்சங்களையும் பக்ஷபாதமின்றி வகுத்துக் கொடுத்திருக்கிறது. இன்று உலகில் நமது முன்னோர்கள் பந்தோபஸ்தாயும் கௌரவமாயும் ஸ்திரீகளின் நன்மையைப் பாதுகாத்துக் கொடுத்திருப்பதைப்போல் வேறு எந்த தேசத்திலும் கிடையாதென்று நாம் பெருமைப் படத் தடையில்லை.

விவாஹரத்து வேண்டுமென்று கேட்பவர்கள் அந்த முறை ஏற்பட்டுள்ள தேசங்களின் சீர்குலைவைக் கவனித்தார்களா? மேற்றிசைகளில் விவாஹ ரத்துமுறை இருந்தபோதிலும் அதனால் அங்கு ஸ்திரீகளுக்கோ புருஷர்களுக்கோ மன அமைதி கிடையாது. கவர்ன்மெண்டாருக்கும் கோர்ட்டுகளுக்கும் தினம் அல்லல் ஏற்பட்டே வருகிறது. கோர்ட்டுகளில் விவாஹரத்துக் கோரும் ஸ்திரீ புருஷர்களின் மானம்போய் விடுகிறது. பற்பல பொய்க் காரணங்களுக்காகவும், அகாரணமான சிறிய மனஸ்தாபங்களுக்காகவும் கணக்கற்ற விவாஹரத்துக் கேஸ்கள் நடைபெறுகின்றன. யுவர்களுக்கும் யுவதிகளுக்கும் நிம்மதியான வாழ்க்கையில்லை. அநேக கேஸ்களில் ஜட்ஜ்களே இதை ஒப்புக் கொண்டிருக்கின்றனர். மத குருக்களான பாதிரிகளும் விவாஹரத்தை ஒப்புக் கொள்ளவில்லை.

இந்த விபரீதம் இந்தியாவுக்கு எதற்கு? விவாஹ ரத்து இல்லாததால் இன்று வரையில் இந்திய ஸ்திரீகள் அடைந்த கஷ்டமென்ன? பர்த்தா எவ்வளவு கஷ்ட தசையிலிருந்தாலும், வியாதிஸ்தனாயிருந்தாலும் பிச்சை வாங்குபவனாயிருந்தாலும், கூட அவனை அனுசரித்துப் பணிவிடை செய்வதே கற்பரசிகளாகிய நம் ஸ்திரீகளின தர்மமாயிருந்து வருகிறது. இந்த தர்மத்தை அழிக்க அவச்யமென்ன?

கரூர் கூட்டத்தில் தலைமை வகித்தவள் மட்டும் விவாஹ ரத்து அஸாத்யமென்று சொல்லி விட்டார். நமது ஸ்திரீகளுக்கு விவாஹ ரத்துப் பிடிக்காதென்று கூறியிருக்கிறார். ஆனால் பால்ய விவாஹம் தொலைந்து, பலதார விவாஹமும் மறைந்தால் விவாஹ ரத்துக்கோர அவச்யமேயிருக்காதென்றும் அவர் பேசினார். இதில் கார்ய காரண ஸம்பந்தம் விநோதமாயிருக்கிறது.

பலதார விவாஹத்தைப்பற்றி இப்போது நவீன ஸ்திரீகளில் அதிகக் கூச்சல் கிளம்பியிருப்பதற்கும் காரணம் புரியவில்லை. இந்தியாவில் ஹிந்துக்களில் பலதார விவாஹமானது அதிகமாயிருப்பதாக நினைக்கக்காரணமில்லை. ஆயிரத்தில் ஒன்றிரண்டுதான் இருக்கக்கூடும். அதற்கும் தகுந்த காரணம் இருக்கும். பூர்வ மனைவியை வேண்டுமென்றே தள்ளிவைத்து மறு விவாஹம் செய்து கொள்ளுவதை ஹிந்துமதம் பெரிய பாபமாகச் சொல்லுகிறது. இப்படியெல்லாமிருக்க இப்போது பலதார விவாஹ எதிர்ப்பு பிரபலமாக்கப்பட்டு ஆர்பாட்டம் செய்ய எவ்வித நியாயமும் இல்லை. இது ஓர் வீண் கூச்சல்!

எப்படியும் இந்த சீர்திருத்த ஸ்திரீகள் வெகு சீக்கிரத்தில் ஹிந்துமத ஸமூஹ வியவஸ்தைகளைப் புகழும் காலம் ஸமீபத்தில் வரும். கற்பரசிகளான கோடிகணக்கான குல ஸ்திரீகளின் கௌரவமே நிலைத்து நிற்கப்போகிறது. அதுவரையில் இந்தச் சீர்திருத்த விபரீதங்களை நாம் பரவ விடாமல் தடுத்துக்கொண்டிருக்க வேண்டியது அவச்யமே. இதற்கு நமது ஸ்திரீகள் முன்னிலும் தீவ்ரமாக தங்களது தர்மங்களை ஆசரிக்க முற்படுவதே தகுந்த தடுப்பு முறையாகும்.

ஆர்யதர்மத்தை அபிவிருத்தி செய்க.

திருவண்ணமலைக் கூட்டத்திற்கு வேண்டுகோள்

(ஓர் அபிமானி எழுதுகிறார்)

சென்றவாரம் ஆர்யதர்மம் பத்திரிகை தலையங்கத்தில் ஸனாதன பிரசாரத்திற்கு பத்திரிகையின் உதவி இன்றியமையாததாகவிருப்பதைக் குறிப்பிட்டு மாகாண மஹாநாடு இதில் தக்க கவனம் செலுத்தவேணுமென்று கோரப்பட்டிருக்கிறது.

பத்திரிகை அவச்யமென்பதை உணராதவர்களேயில்லை. மஹாநாடுகள் தோறும் இதைப்பற்றி ஓர் தீர்மானம் நிறைவேற்றப்படுவதும் ஒரு ஸம்பிரதாயச் சடங்காக ஆகிவிட்டது. ஆயினும் இன்று வரையில் கார்யத்தில் ஒரு பலனையும் காணோம். தேவாலயங்களும், மடங்களும், தனிகர்களும் ஸனாதனக் கக்ஷியில் ஏராளமாக இருந்தும் தென்னிந்தியாவில் ஸநாதநப் பத்திரிகையை பலமான அஸ்திவாரத்துடன் ஆரம்பிக்க முயற்சிக்காமலிருப்பது வருந்தக்கூடிய விஷயம். மிகப் பெரும்பாலோரான ஸனாதனிகள் சந்தாதார்களாகச் சேர்ந்தால் ஓர் தினசரியை நடத்துவது கூட அஸாத்யமன்று.

புதிய பத்திரிகையை ஆரம்பிக்கா விட்டாலும் 25 வர்ஷகாலமாக ஸனாதநத்திற்கு உழைத்து வருகிற நமது ஆர்யதர்மத்தையாவது அபிவிருத்தி செய்து நாம் நன்மையடையக் கூடாதா? "ஆர்யதர்மத்தை ஆதரிக்கவேணும்" என்று தீர்மானம் செய்து விட்டுப் போய் விட்டால் போதுமா? தென்னிந்தியாவில் ஆர்யதர்மத்தைப் போல், கலப்பற்ற ஸனாதநத்திற்கு உழைக்கும் பத்திரிகை இருக்கிறதா? சென்ற ஆலயப்பிரவேசக் கிளர்ச்சி காலத்தில் இப்பத்திரிகையின் உதவியால் ஸனாதநிகள் அடைந்த நன்மை கணக்கில்லை. காங்கிரஸ் மந்திரிகளும் சீர்திருத்தவாதிகளும் ஆர்யதர்மத்தைப் படிக்காமலிருப்பதில்லை.

சென்னை கவர்மெண்டாரும், இந்தியா கவர்மெண்டாரும் கூட இதைப்படித்து வருகிறார்கள். இந்தியாவின் பல மாகாணங்களிலும், சென்னையில் பல கிராம நகரங்களிலும் ஆர்யதர்மம் பிரசாரம் அடைய ஆரம்பித்திருக்கிறது. நிர்வாஹ கமிட்டி, ஆபீஸ் முதலிய சகல ஸௌகர்யங்களும் அமைந்து நடந்து வருகிறது. ஆகவே சகல விதத்திலும் ஸௌகர்யத்துடன அமைந்துள்ள இப்பத்திரிகையை தக்க உதவி செய்து அபிவிருத்தி செய்தாலே போதுமல்லவா?

இப்பத்திரிகைக்கு வேண்டியளவு ஓர் மூலதனத்தை சேகரிக்க நமது தலைவர்கள் முற்பட்டால் வெகு எளிதாக நடக்காதா? ஒவ்வொரு ஸனாதநியும் சந்தாதாராகச்சேர்ந்தால் தென்னிந்தியாவில் ஆயிரக்கணக்கான சந்தாதாருள்ள பத்திரிகை இது வொன்றுதானென்று சொல்லக்கூடியதாகி விடும். கிராமத்திற்கு ஒரு கோஷ்டியாக நமது பிரசாரகர்கள் கிளம்பி வேலை செய்தால் வெகு எளிதாக கார்யஸித்தி ஏற்படும். தற்போது ஆர்யதர்மத்தின் திரவியநிலை திருப்திகரமாயில்லையென்று அறிகிறோம். சாந்தாதார்களுடைய அபிமானமும் குறைவுதானென்று தெரிகிறது. இதே நிலைமையில் இப்பத்திரிகையை விட்டுவைப்பது அநுசிதமாகும். 25 வருஷகாலத்தில் எவ்வளவோ, தினசரி, வார, மாதப்பத்திரிகைகள் தோன்றிமறைந்து போய்விட்டதை

ஸொத்துப் பறிமுதல் செய்யவேண்டுமாம்!

சில பத்திரிகைகளின் யோஜனை

காங்கிரஸ்காரர்கள் சட்ட மறுப்புச் செய்து ஜயில் போவதை ஓர் தமாஷாக நினைத்து விட்டதாயும், ஏ. பி. வகுப்புகளில் சேர்ந்து ஜயில் வாஸம் செய்வது கஷ்டமில்லையென்றும், வெகு ஸௌகர்யமென்றும் அதனால் தான் பல காங்கிரஸ்காரர்கள் ஜயிலுக்குப்போகத் துணிவு கொள்ளுகிறார்களென்றும், ஆகையால் கடுமையான தண்டனை கொடுக்காவிடில் இயக்கம் அடங்காதென்றும் ஜஸ்டிஸ பத்திரிகைகள் கூறுகின்றன

குற்றம் புரிபவர்களின் ஸொத்தைப்பறிமுதல் செய்யவேணுமென்றும், கசையிடி முதலியவை கொடுக்கவேணுமென்றும் அப்படிச் செய்தால் ஸத்யாக்ரஹம் நின்றுவிடுமென்றும் அவை கூறுகின்றன. இந்த யோஜனையை ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்தின் போதும், கிலாபத் இயக்கத்தின்போதும் வெளியிட்டிருந்தால் நன்றாயிருக்குமே? ஏன் அப்படிச் செய்யவில்லை. வியவஸ்தையை அழிப்பவர் எவரையும் பக்ஷபாதமின்றி தண்டிக்க வேண்டியதுதான். (நியாயவாதி)

யுத்தத்தில் ஜயம் பெற

மீனாக்ஷி கோவிலை சுத்தமாக்குக!

சேலத்தில் சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர், ஸ்ரீபாகவதம், ஸ்ரீராமாயணம் முதலியவைகளை பிரவசனம் செய்யும்போது திரளான ஜனங்கள் கூடியிருந்தனர். ஜில்லா கலெக்டர் ஜில்லா ஜட்ஜ் மாஜிஸ்ட்ரேட் ஜட்ஜ் போன்ற பிரபலஸ்தர்களும் வந்திருந்தனர். அவர்கள் முன்னிலையில் ஸ்ரீ தீக்ஷிதர் பிரகிருத யுத்தத்தில நமது சக்ரவர்த்திக்கு ஜயமுண்டாக வேண்டுமென்றும் நாம் எல்லாவித உதவிபுரிய வேண்டும் மென்றும் கூறினார்.

தவிர ஆலயப்பிரவேசாதி அதர்மங்களால் தான் இத்தகைய யுத்தங்கள் ஏற்படுகின்றனவென்று பற்பல வேதவாக்யங்களைக் கொண்டு நிரூபணம் செய்ததுடன் யுத்தத்தில் சாச்வதமான ஜயம்பெற வேண்டியதற்காக ஸ்ரீமீனாக்ஷி கோவில் போன்ற அசுத்தமாக்கப் பட்டகோவில்களில் உடனே ஸம்புரோக்ஷணம் நடத்தி தைவஸாந்நித்யத்தை ஏற்படுத்துவது அவச்யமென்றும் அவர் எடுத்து நிரூபணம் செய்தார். ஜனங்களும், அதிகாரிகளும் இதை உணர்ச்சியுடன் கேட்டார்கள். (ந. நி.)

நினைத்தால் ஆர்யதர்மம் 25 வருஷமாக ஜீவித்து உறுதியுடன் பிரசாரம் நடத்துவதில்பெருமைப்பட வேண்டியதே. மேலும் இப்பத்திரிகை, பிரபல எதிரிகளான சீர்திருத்தக்காரர்களையும், நவீன விபரீத எண்ணங்களையும் கண்டித்து, தற்காலப்போக்குக்குப் பிடிக்காத ஒரு பிரசாரத்தைக் செய்துகொண்டிருந்தும் கூட 25 வருஷம் நிலைத்து ஊழியம் புரிந்து வருவது விசேஷமல்லவா? ஆதலால் திருவண்ணாமலை மஹாநாட்டில் குறிப்பாக ஆர்யதர்ம அபிவிருத்தியைப் பற்றித் தக்க ஏற்பாடு கார்யத்தில் செய்யவேண்டியது அவச்யமென்று வற்புறுத்துகிறோம். அகில இந்திய வர்ணாச்ரம ஸங்கத்தாரும் தென்னிந்தியாவிற்கு ஆர்யதர்மத்தை பிரசாரப் பத்திரிகையாகக்கொண்டு பணஉதவி முதலியவை செய்யவேண்டியதும் அவச்யமென்பதை மஹாநாடு வற்புறுத்த வேண்டும்.

ஸி. ராஜகோபாலாசாரியருக்கு தண்டனை

ஒரு வருஷம் வெறுங்காவல்

மாஜி பிரதம மந்திரியான ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியர் யுத்த எதிர்ப்பு பிரசாரம் செய்ததாகக் கைது செய்யப்பட்டு சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டால்ஒருவருஷ வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

ஹிந்து ராஜ்யத்திற்கு மகமதிய நிர்வாகி?

புதுக்கோட்டை நியமனம்

புதுக்கோட்டை ஸமஸ்தான உதவி நிர்வாஹ உத்யோகஸ்தராக திருச்சி கான் பஹதூர் கபிபுல்லா சாஹிப் என்பவர் சென்னை கவர்ன்மெண்டாரால் நியமிக்கப் பட்டிருக்கிறார். இவர் தீவ்ர ஜஸ்டிஸ் கக்ஷி. ஜின்னா சிஷ்யர். பாகிஸ்தான், ஆரியதிராவிட பூசல் ஆகியவைகளில் ஸம்பந்தமுள்ளவர்.

சென்னையில் ஸர்வமத மஹாநாடு

மேற்படி மஹாநாடு சென்னையில் நடந்தது. உபசரணைக் கமிட்டித் தலைவர் ஒரு ஸ்திரீ. மஹாநாட்டுத்தலைவரும் ஸ்திரீயே. ஜைநம், பௌத்தம், ஹிந்துமதம் ஆகியவைகளைப்பற்றி அந்தந்த மதத்தினர் புகழ்ந்து பிரஸங்கம் புரிந்தனர். மத ஐகமத்யம் வற்புறுத்தப்பட்டதாம்.

திருவாங்கூர் ஸ்திரீகள் நிலைமை

மேற்றிசையாரைவிட மேலாகி விட்டதாம்

ராணியின் புகழ்ச்சி

திருவாங்கூர் மஹாராணிக்கு டெல்லி ஸ்திரீகள் வாசித்துக்கொடுத்த ஒரு உபசார பத்திரத்திற்கு அவர் பதில் கூறுகையில் "ஸ்திரீகளின் நிலைமை நவீனநாகரீக முறைப்படி மிகவும் உயர்ந்துவிட்டதென்றும் மேற்றிசை ஸ்திரீகள்கூட திருவாங்கூர் ஸ்திரீகளைக்கண்டு பொறாமை அடையும்படி அவ்வளவு தூரம் நாகரிகம் முற்றிவிட்டதென்று' ராணி புகழ்ந்து கூறினாராம். இதிலிருந்து திருவாங்கூர் ஸ்திரீகளின் விபரீத நிலைமையை ஹிந்துக்கள் ஊஹித்துக்கொள்ளலாமல்லவா?

விழுப்புரம்

1940ஆம் செப்டம்பர்மீ 21உ முதல் பிரதிதினம் இரவு 8½ மணிக்கு மேல் 10½ வரையில் விழுப்புரம் ஆஸ்திக சிகாமணிகளால், இந்தியன் ரெயில்வே காலனியில் ஹெட் டிரெயின் கிளார்க்கு மகா-ள-ஸ்ரீ ராமசாமி அய்யர் கிரகத்தில், பிரம்மஸ்ரீ ஆனங்கூர் P. வெங்கட்ராம சாஸ்திரிகளவர்களால் பாகவத தசமஸ்கந்த பிரவசனம் ப்ராசீன சாஸ்திர சம்வர்த்தன ரீதியாய் நடைபெற்று வருகிறது. 2—12—40 ஸ்ரீ ருக்மணி கல்யாணப் நடத்தி 6 அல்லது 7 தேதி பிரவசனம் முடிவு செய்யப்படும்.

V. S சுந்தரம் அய்யர்

சென்னை மாகாண வர்ணாச்ரம சுயராஜ்ய சங்க மஹா நாடு.

திருவண்ணாமலை

நிகழ்ச்சிக்குறிப்பு

திருவண்ணாமலை சத்தி விலாஸ் மண்டபம் 9—12—40 திங்கள் பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை

கடவுள் வாழ்த்து, கொடியேற்றுவிழா, கொடியேற்று விழாத்தலைவர், மகாநாட்டுத் திறப்பாளர் வரவேற்புக் கழகத் தலைவர் பிரசங்கம். மஹாநாட்டுத் தலைவர் முன்னுரை.

இரவு 8 மணிக்கு விஷயாலோசனை சபை ஆரம்பம்.

10—12—40 செவ்வாய், 11—12—40 புதன் இரு தினங்களில் காலை 9 மணிமுதல் 12 மணி வரை. மாலை 3 மணி முதல 5½ மணி வரை. தீர்மானங்கள் நிறைவேற்றுதல், தலைவர்களின் பிரசங்கம்.

11—12—40 புதன் மாலை 6 மணிக்கு வந்தனோபசாரம்.

இரவு 7 மணி முதல் 8½ மணி வரை மூலமண்டபத்திற்கு முன் பொதுக்கூட்டத்தில் தலைவர்களின் சொற்பொழிவு.

12—12—40 அண்ணாமலை தீபம்

ஆண்-பெண் கலப்பு படிப்பு மிகக் கேவலமானது

சென்னையில் ஒரு கூட்டத்தில், ஸ்ரீ டங்கன் கிரின்லீஸ் என்ற படிப்பாளி ஒருவர் ஆண் பெண் கலப்புப்படிப்பைப்பற்றிப் பின் வருமாறு கூறினார்:

"ஐரோப்பிய நாகரிகமே சிறந்ததென்று நினைத்து ஹிந்துக்கள் அதைப்பின்பற்றுவது மிகவும் வருந்தத்தக்கது. இப்போது ஐரோப்பிய நாகரிகம் மிகக் கேவலமடைந்து வருகிறது. ஒரே பள்ளிக்கூடங்களில் ஆண்-பெண்கள் சேர்ந்து படிப்பது மிகவும் கெடுதலானது. அது அறிவு வளர்ச்சி ஏற்படுவதற்கும் பெரியதடையாயிருக்கிறது. இது அநுபவத்தில் தெரிந்த விஷயம்"

ஸத்யாக்ரஹ கண்டனம்

ஹிந்து மஹாஸபைத் தீர்மானம்

பம்பாயில் கூடிய ஹிந்து மஹாசபைக் கார்யக் கமிட்டியானது ஸர்க்காரின் அடக்குமுறைக் கொள்கையை கண்டித்தபோதிலும். காங்கிரஸ்காரர்கள் ஆரம்பித்துள்ள ஸத்யாக்ரஹத்தை ஆதரிக்க முடியாதென்றும், ஹிந்து ஸபையினர் அதில் சேரவோ, அநுதாபம் காட்டவோ கூடாதென்றும் தீர்மானம் செய்தது.

ஒத்தி வைக்கப்பட்டது

தஞ்சை ஜில்லா யுத்த கமிட்டியாரால் 8—12—40ல் நடத்தப் படுவதாயிருந்த லாட்டரிசீட்டுக்குலுக்குவது (Raffle) 12—1—41தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதாக நமக்கு அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவும் விமானத் தாக்குதலும்

எச்சரிக்கையான ஏற்பாடுகள்

ஒரு வருஷத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி.

யுத்தம் ஆரம்பித்தபின் ஒருவருஷ காலத்தில் விமானத் தாக்குதலைச் சமாளிப்பதான ஏற்பாடுகள் இந்தியாவில் பெரிதும் அபிவிருத்தியடைந்திருக்கின்றன.

இந்த ஏற்பாடுகளில் காவலர் படை அமைத்து, நெருப்பணைக்கும் உதவிப்படையமைப்பது, வைத்திய உதவிதருவது, பாதுகாப்புள்ள தளங்களும் கட்டடங்களும் நிருமாணிப்பது, தேசத்தைக் கவனிப்பதற்கு சரியான உபகரணங்களோடு கூடிய மீட்சிப் படைகளைத் தயாரிப்பது, விஷவாயுக்கள் சம்பந்தமான எச்சரிக்கை ஏற்பாடுகள், இந்த இந்தவேலைகளே முக்கியமாகும். பயிற்சிப்பற்றுப் போதனையளிக்கக் கூடியவர்களும் உபகரணங்களும் போதிய அளவு கிடைக்காமையாலும், செலவுக்குப் பொருள் கஷ்டத்தாலும் இந்த ஏற்பாடுகள் எல்லாவற்றையும் உடனே ஆரம்பிக்க முடியவில்லை. ஆகவே ஆரம்பத்தில் காவலர்களை திரட்டி அவர்களுக்குப் பயிற்சியளிப்பது நெருப்பணைப்புப் படையைத் திருத்தியமைப்பது, வைத்திய உதவிக்கு ஏற்பாடு செய்வது இந்த மூன்றில் மட்டும் கவனம் செலுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. இந்தியாவில் விமானத்தாக்குதல் எச்சரிக்கை ஏற்பாடுகளுக்கு இம்மூன்றே அடிப்படையாகும். விஷவாயுப் பிரயோகம் செய்வது சாத்தியமாயினும் நடக்கக் கூடியதல்லவென்று கருதப்பட்டது.

விமானத் தாக்குதலைப்பற்றி மின்சாரத்தால் இயங்கும் தாரைகள் மூலம் எச்சரிக்கை சமிக்ஞைகளும் நிர்ணயித்துவைக்கப்பட்டிருக்கின்றன ஆபத்துக்குள்ளாகக் கூடிய இடங்களிலெல்லாம் ஒரே மாதிரியான கருவிகள் அமைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மிகவும் பரந்த விஸ்தீரணமுடைய இந்தியா தேசத்திலே சில பாகங்கள் கூடிய வரை தாக்குதலால் பாதிக்கப்படக்கூடாத நிலையிலிருக்கின்றன ஆனால், பலுசிஸ்தானம், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பஞ்சாபில் பெரும் பாகம் ஆகிய இந்தப் பிரதேசம் தாக்குதலால் பாதிக்கப்படலாம். பங்காளும் ஆஸ்ஸாமிலும், பீஹாரிலும் சிலபாகங்களும் பாதிக்கப்படலாம். கிழக்கேயும், மேற்கேயும், உள்ள கராச்சி, பம்பாய், சென்னை, கல்கத்தா போன்ற துறைமுகங்களும் தாக்குதலுக் குள்ளாகக் கூடும்.

பெருவாரியான ஜனத்தொகையுள்ள இந்நாட்டில், பல்வேறு வகையான மலைகளுள்ள மாகாணங்களில் மக்கள் சிதறிக்கிடக்கும் நிலையில், பணமும் அதிகமாக இல்லாலாமல் விமானத் தாக்குதலைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடிப்பது கஷ்டமான காரியமே. ஏற்பாடுகளை மத்திய சர்க்காரும் செய்ய வேண்டும் மாகாணங்களும் செய்யவேண்டும், ஆகவே இந்த ஏற்பாடுகளையெல்லாம் ஒருமுகமாய்க் குத்துவதும் பெரிய வேலையாருக்கிறது.

இந்தியா இன்னும் யுத்தப்பிரதேசத்தினின்று வெகு தூரத்தில் தானிருக்கிறது. இதனால் எதேச்சாதிகார யுத்தம் நடக்கும் இந்தக்காலத்தில் சாத்தியமான திசை எல்லாம் போர் வைக்கக்கூடும் தற்சமயம் தாக்குதல் நடக்குமென்று தோன்றவில்லைதான். ஆயினும் அதிகாரிகள் இங்கிலாந்தினிடமிருந்து பாடங்கற்றுக்கொண்டு விட்டார்கள் ஆகவே நம்முடைய வசதிகளைக் கொண்டு செய்யக்கூடிய அளவுக்கு தயாராயிருக்கஅவர்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

ஆலயமும் வழிபாடும்

ஆலயம் என்பது தன்னை நம்பினவர்கள் தன்னை மெய்மறந்து சற்று நேரமாவது தொழுமாறு கடவுள் விசேஷ சாந்நித்யத்துடன் வீற்றிருக்கும் இடம்.

நாம் நம்முடைய வீட்டில் வாசல், கூடம் முற்றம் படுக்கையறை, சமயலறை கக்கூஸ் முதலான பலவித பாகுபாடுகளுடன் வைத்துகட்டி முடிப்பது போல் தேவாலயங்களிலும் ஆகமசாஸ்திரம் சிற்பசாஸ்திரம் முறைப்படி பிரதான மண்டபம் அர்த்தமண்டபம் கர்ப்பக்கிரஹம் முதலான பலவித இடங்களாக வகுத்து கட்டப்படுகின்றது. நம் வீட்டில் இன்னின்ன இடங்களுக்கு இன்னின்னார். இன்னின்ன சமயங்களில் மட்டும் போய்வரலாம் என்ற வரமுறை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். படுக்கையறைகளிலேயோ சமயலறைகளிலேயோ தன்னுடைய ஆப்தனை மட்டும் விடுகிறதாக இருக்கிறது. அதிலும் தம்பதிகளுடன் கூடியிருக்கும்போது தாய்தகப்பனையோ வயதுசென்ற பெண்பிள்ளைகளையோகூட சயன அறைக்கு அனுமதிப்பதில்லை. வேலைக்காரர்கள் வாசல் முற்றம் கூடம் முதலானதுகளுக்கு மட்டும் பிரவேசிக்க அனுமதிக்கிறோம். சமயலறையில் விடுவதில்லை. கக்கூஸைக் கழுவும் குறத்தியை நம் சமயலறையிலே விடுவதில்லை. அதேமாதிரி ஒவ்வோர் இடமும் எதற்காக ஏற்பட்டு யார்யாரை மட்டும் அனுமதிக்கலாம் என்று ஏற்படுத்தியிருக்குமோ அம்மட்டும் நடந்து வருகிறோம், மேலும் மஹிடாகாலங்களில் நமது சொந்த பத்தினியையும் தாயையும் சகோதரியையும்கூட வீட்டுக்குள் விடுவதில்லை. கேவலம் மனுஷயனுக்கு மட்டும் இவ்வளவு வரையரைகள் இருக்கும்போது சர்வ நியந்தாவாயும் மனுஷ்யனையே சிருஷ்டித்தவராகிய ஈஸ்வரனுக்கு என்று ஏற்பட்ட ஆலயங்களில் இப்பேர்க்கொத்த முறையை அனுஷ்டிப்பது நம் கடமை இல்லையா.

தேவாலயங்களில் இன்னின்ன இடங்களுக்கு இன்னின்னார் இன்னின்ன சமயங்களில் மட்டும் போகலாம் என்று ஆகம சாஸ்திரம் முறையிடுகிறது. கேவலம் மனுஷ்யனால் ஏற்படுத்தப்பட்ட கட்டளையை மீற முடியாமல் தவிக்கும் நாம் அனாதியாய் ஈஸ்வரனால் ஏற்படுத்தப்பட்ட ஆகமசாஸ்திரம் என்னும் கட்டளையை மீறலாமா? அது ஈஸ்வரனுக்கும் பொறுக்குமா. பஞ்சமன் முதலான தீண்டத்தகாதார் கோவில் வாசலிலும் இதர வருணத்தார்களில் பிராம்மணர்கள் நீங்கலாக மற்றவர் இன்னமண்டபம் வரைசெல்லலாமென்றும், பிராம்ணர்களும் மட்டும் அர்த்தமண்டபம் என்றும் பிராம்மணர்களிலும் ஆகமசாஸ்திரம் செவ்வனே கற்றுணர்ந்து தீக்ஷாவிதிகள் பெற்று பயின்ற குருக்கள் மட்டும் கர்ப்பகிரஹ மூலஸ்தானத்துக்கு போய்வரலாம் என்றும் ஏற்பட்டிருக்கிறது. பிராமணர்களும் தங்கள் பந்துமித்திரர்களின் பிறப்பு இறப்பு காரணமாய் ஏற்படும் தீண்டல் காலங்களில் ஆலயங்களுக்கு செல்லலாகாது.

தேவாலயங்கள் ஆகம சார்ஸ்திரத்தை யொட்டியும் சிற்பசாஸ்திரத்தை அனுசரித்தும் அநேக சாஸ்திர விதிகளுக்கு கட்டுப்பட்டு கட்டப்பட்டும் ஈஸ்வர மூர்த்தியும் அநேக விதமான ஜபதபஹோம யக்ஞாதிகளால் விசேஷ சாந்நித்யமும் பெற்று தேஜோமயமாய் விளங்குகிறது. மேலும் பரமாசார்யாளால் இட்ட கட்டளையை சிரமேற்கொண்டு நாம் ஈஸ்வரனை சற்று நேரமாவது ஒய்வுநேரத்தில் நிம்மதியாய் மனதார பக்தியுடன் தரிசித்து வரலாம் என்னும் அவாவுடன் ஆலயம் செல்வதாயிருக்க சில நவீன ஆசார்யாளும் அவர்களைச் சார்த்தவர்களும் சொல்லும் வீண் பசப்பு வாதங்களை சிலமந்தி ஜனங்கள் ஏதோபிருந்தியால் கேட்டு சாந்தியே ஏ படக் கூடாதநிலைமையில் பிதற்றுகிறார்கள். கோவில் என்ன குளம் என்ன அங்கிருக்கும் ஸ்வாமியும் கல்தானே. அதற்கு எங்கிருந்து தீட்டு ஏற்படப்போகிறது. என்றெல்லாம் சொல்கிறார்கள். ஐயோ! கலியின் போக்கே போக்கு. இப்படிச் சொல்லும் நாஸ்திக வாதக்காரர்களுக்கு ஒன்றுகேட்டுக் கொள்கிறோம். தன் வீட்டு வாயிற்படியிலுள்ள கல்லில் முட்டிக்கொண்டு அவர்களைச் சாந்தவர்களையும் முட்டிக் கொள்ள சொல்லி ஈஸ்வரன் என்று வழிபடட்டும்.

இதை உத்தேசித்தே பண்டைக் காலத்தில் மஹாராஜாக்களால் பெரிய பெரிய ஆலயங்கள் கட்டுவித்து முதல் நாலுவர்ணத்தாரும் தொழும்படி ஆலயங்களில் பூஜை நைவேத்பம் முதலானதுகள் செவ்வனவே நடந்துவர மான்யங்கள் முதலானதுகள் விட்டும் தீண்டத்தகாதவர்களுக்கென்று சேரியில் காட்டேரி முதலான தேவதைகளுக்கு கோவில்களும் கட்டி அவரவர்கள் அவரவர்களுடைய ஜாதிமுறை வர்ணாசிரமபடி வழிபாடு செய்யும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள் உற்சவங்கள் முதலானதுகள் தீண்டத்தகாதவாகள் ஷை காலங்களில் ஆஸ்வர மூர்த்தியை வெளியில் எடுத்துச்செல்லும் போது தரிசிக்கவேண்டியே ஏற்பட்டன.

இன்னும் சில சீர்திருத்தக்காரர்கள் ஒரு குயுக்திவாதம் பேசுகிறார்கள் நந்தனார் போன்றபறையர்கள் ஆலயத்தில் முன்காலத்தில் நுழைந்து தரிசனம் செய்து சிவனடியை சேர்ந்ததாக புராணம் சொல்லவில்லையா? அப்படிருகக இக்காலத்து பறயர்கள் மட்டும் ஏன் நுழையக்கூடாது சிவனடியை சேரக்கூடாது என்கிறார்கள் ஆஹா பேஷாய் நுழையட்டும் நுழைந்தால் மட்டும் போதாது. நந்தனார் எப்படி அக்கினி குண்டதில் பிரவேசித்து சிவதீக்ஷைபெற்று பிற்பாடு சிவனடியைச் சேர்ந்தாரோ அதே மாதிரி இவர்களும் அக்னிபிரவேசம் செய்தும் சிவனடி சேரட்டும் ஆக்ஷேபனையே யில்லை.

ஹரிஹரய்யர்
மேல்மங்களம்

பாகிஸ்தானே முக்ய லக்ஷ்யம்

"உயிரையும் விடத்தயார்"

ஜின்னா கூற்று

ஜனாப் ஜின்னா வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் மூஸ்லீம் லீக்கின் பிரதான லக்ஷ்யம் பாகிஸ்தான் திட்டம் தானென்றும், அதை அடைய முஸ்லீம்கள் உயிரையும்விடத் தயாராயிருப்பதாயும், இந்தியாவில் கால் பாகத்தை எடுத்துக்கொண்டு முக்கால் பாகத்தை ஹிந்துக்களுக்கு ஸர்வமான்யம் செய்துவிடத்தான் தயாராயிருப்பதாயும் அவர் கூறியிருக்கிறார்.

521

ஆத்தன்குடி
வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம்.

"ஆர்யதர்மம்" மாஜி ஆசிரியர்களும் சாஸ்திர ரத்தினங்களுமான ப்ரும்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் வரகூர் ப்ரம்மஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகள் இருவர்களும் இம்மண்ணுலகை நீத்தது குறித்து இச்சபை மிக்க வருந்துவதுடன், அன்னார்களின் குடும்பத்தினர்களுக்கு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

திருவண்ணாமலை மாகாண மஹாநாட்டிற்கு ஸ்ரீ. சு. வீர. கதிரேசன் செட்டியார், மூ. திருவேங்கடமய்யங்கார், தி. ப. ஜெகதீசய்யர் முதலானோர் இச்சபையின் பிரதிநிதிகளாக தெரிந்தெடுக்கப் பெற்றனர்.

பிரசார கரியதரிசி.

மன்னார்குடி

கார்த்திகை மாதம் 10௨ (25-11-40) ஏகாதசியன்று இரவு 7 மணி முதல் 9 மணி வரையில் இவ்வூர் கீழ இரண்டாம் தெரு விக்னேச்வரர் ஆலயத்தில் நாஷனல் ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத உபாத்தியாயர் சிரோமணி பிரும்மஸ்ரீ த ச ர த ரா ம சாஸ்திரிகளவர்களால் 'கார்ஹஸ்த்யம்' [கிருஹஸ்தர்களின் கடமை] என்ற விஷயத்தைப்பற்றி உபன்யாசம் செய்யப்பட்டது. அதில் கிருஹஸ்தாச்ரமத்திலிருப்பவர்கள் பிராம்ம முகூர்த்தத்தில் எழுந்திருந்து தந்த தாவனம், ஸ்நானம், ஜபம், ஹோமம், பஞ்ச மஹாயக்ஞங்கள், இரவில் சயனபர்யந்தம் செய்யவேண்டிய கடமைகளை தற்காலம் நாம் செய்யவேண்டிய ரீதியில் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

உபன்யாசத்தின் முடிவில் ரிடயர்டு போஸ்டுமாஸ்டர் ப்ரும்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்களால் ப்ரும்மஸ்ரீ சா ஸ் தி ரி களுக்கு வந்தனோபசாரம் தெரிவிக்கப்பட்டதுடன் கூட்டம் கலைந்தது.

எம்.எஸ். சுப்பிரமணிய அய்யர்.

நல்லமாங்குடி
முத்ராதிகாரி பிரசாரம்.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீமச்சங்கரபகவத் பாதாள் அவர்கள் ஆக்ஞாப்பிரகாரம் இவ்வூரில் சென்ற ஆடி மாஸம் முதல் ஒவ்வொரு ஏகாதசியிலும் ஸ்ரீலெக்ஷ்மி நாராயணப் பெருமாள் ஸன்னிதானத்தில் ஸ்ரீமத் வால்மிகி ராமாயணம் ஆரம்பித்து நடந்து வருகிறது. ஆஸ்திக மஹா ஜனங்கள் அனைவரும் வந்திருந்து நடத்தி வருகிறார்கள். கார்த்திகைமீ 10௨ ஏகாதசியன்றும் ஆலங்குடி பிரும்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்களால் பாதுகா ப ட் டா பி ஷே க ம். ஷை ஸன்னிதானத்தில் பிரவசனம் ஆச்சார்ய ஆக்ஞையை சிறமேற்கொண்டு செய்து வருவதாக ஒப்புக்கொண்டிருப்பது ரொம்பவும் போற்றத்தக்கது. ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து ச்ரவணம் பண்ணி ஆனந்தித்தானது அவரவர்களுடைய ச்ரத்தையை நன்கு வெளிக்காட்டியது. மென்மேலும் ஸ்ரீபரமாச்சாரியாளுடைய அனுக்ரஹத்தினால் அநேக உத்கிருஷ்டமான உபன்யாஸங்கள் நடைபெறுமென்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

N. சிவசுப்பிரமணிய அய்யர்.

நாகூர்
பஜனை உத்ஸவம்

நாகூரில் ஸ்ரீமத் ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரியாள் சுவாமிகள் அவர்கள் பூர்ணானுக்கிரஹம் பெற்றவரும் அவர்கள் முக்கிய சிஷ்யரும் ஸனாதனியும் வாரணாசிக்கு மூன்றுதடவையும் பத்ரிகாச்ரமும் ஸ்ரீ சயிலம் முதலிய க்ஷேத்திரங்களுக்கும் போய் வந்தவருமான, து. வீராசாமிய்யரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஸ்ரீ பஜனைமடத்தில் ஸ்ரீபிரசன்ன வெங்கிடாசலபதி சுவாமி கோவில் ஸீதாலெக்ஷ்மண ஹனுமத்ஸமேத ஸ்ரீராமசந்திர ஸ்வாமிக்கு அபிஷேகம் ஆராதனைகள் செ ய் வி த் து விக்கிரமஸு கார்த்திகைமீ 10௨ ஏகாதசியன்னும் 11௨யும் பலவூர் பாகவதோத்தமர்களால் பஜனை முதலிய உத்ஸவமும் 12௨ புதன்கிழமை ஷை வீராசாமி அய்யருக்கு யோகஷஷ்டி பூர்த்தி வைபவம் வெகுவிமர்சையாய் மகான்களான வேதோத்தமர்களால் சீந்துக்கொடி அருகம்பில்லால் அமிர்தமிருத்துயஞ்சய்ஹாமமும் ஜெபம், சூரியநமஸ்காரம், ஆயுஷ்ய ஹோமமும் அநேகதானங்களும் நடத்தி பிராமண சந்தர்ப்பணையும் நடந்தது. மாலை பிரதோஷம் சிவன் கோவிலில். சுவாமி, அம்பாள், விக்னேச்வரர், சுப்பிரமணியசுவாமி தெக்ஷிணாமூர்த்தி, நவக்கிரஹங்களுக்கும் அபிஷேகம் நைவேத்தியம் ஸ ஸ் ர நா ம அர்ச்சனை, வினியோகமும் நடந்து பஜனை மடத்தில் உத்ஸவம் பூர்த்தி செ ய் ய ப் பட்டது.

நமது நிரூபர்.

மதகுரு போப் அவர்களின் உபவாஸம்-

கிறிஸ்தவமதப் பிரதான குருவாகிய போப் அவர்கள் பிரகிருத யுத்தத்தில் நடக்கும் அக்கிரமங்களையும் நிரபராதிகளின் கோரக் கொலைகளையும் கண்டு வருந்தி அதற்காக ஒருவாரம் உபவாஸமிருக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.

மலையாள ஆலயபிரவேச இயக்கம்
ரெபரெண்டம் எடுப்பது நிறுத்தப்பட்டது

கேரள ஆலயபிரவேசக் கமிட்டியார் ஆலயபிரவேசத்திற்கு ஸாதகமாக ரெபரெண்டம் எடுக்க வேண்டியதைப்பற்றி யோஜித்தார்கள். தத்கால ராஜ்ய நிலைமையை உத்தேசித்தும், வேறு காரணங்களைக் கொண்டும் ரெபரெண்டம் எடுக்கும் வேலையானது கால வரை குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுவிட்டது.

ஸ்திரீகளின் ஸொத்து உரிமை
விசாரணைக் கமிட்டி நியமிக்கப்படும்

இந்தியா சட்ட ஸபையில் கவர்மெண்ட் மெம்பர் பேசுகையில் ஹிந்து ஸ்திரீகளின் ஸொத்து பாத்யம் ஜீவனாம்சம், வீடு, நிலங்கள் பாத்யதை முதலியவைகளைப் பற்றி விசாரிக்க கவர்ண்மெண்டார் தகுந்த வக்கீல் களடங்கிய கமிட்டியொன்றை நியமிக்கப் போவதாகச் சொன்னார்.

'பாகிஸ்தான் திட்டத்தை ஏன் கண்டிக்கவில்லை'
இந்தியா மந்திரியின் தவறு
ஸர். என். என். ஸர்க்கார் கண்டனம்.

இந்தியா கவர்மெண்ட் சட்டமெம்பராயிருந்த ஸர். ந்ருபேந்திரநாத ஸர்க்கார் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், இந்தியா மந்திரிகர்னல் அமெரிபார்லிமெண்டில் பேசியுள்ள தோரணையைக் கண்டித்திருக்கிறார். இந்தியா மந்திரி தமது பேச்சில், இந்தியக் குழப்பங்களுக்கு காங்கிரஸ் தான் காரணமென்று குறிப்பிட்டிருந்தார். காங்கிரஸ் மீது குற்றம் சாட்டியது போல் முஸ்லீம் லீகின் மீதும் ஏன் குற்றம் சாட்டவில்லை என்று ஸர். ஸர்க்கார் கேழ்கிறார். ஜின்னாவின் விஷமத்தனமான "பாகிஸ்தான்" திட்டத்தை ஏன் இந்தியா மந்திரி கண்டித்துப் பேசவில்லை யென்றும் அவர் கண்டிக்கிறார்.

எம். ஏ. பட்டம்பிடுங்கப்பட்டது

டெல்லி மாணவர்கள் இருவர்கள் கவர்ண்மெண்ட் விரோத கார்யத்தில் சேர்ந்து ஸர்க்காரைக் கண்டித்த் குற்றத்திற்காக அந்த மாணவர்களுடைய எம். ஏ. பி. ஏ. பட்டங்களை பெடரல் ஜட்ஜ் மாரிஸ்க்யவர் ரத்து செய்துவிட்டரர்.

இதன் காரணமான லக்ஷ்மணபுரியில் ஸர் குயர் மாணவர்களுக்குச் செய்யப்படவிருந்த பிரஸங்கத்தை அவர்கள் பஹிஷ்கரித்து ஆர்பாட்டம் செய்தார்கள். அதனால் அந்த பிரஸங்கம் ரத்து செய்யப்பட்டது.

மாகாண அரசியலை ஸஸ்பெண்டு செய்ய வேணும்.
இந்தியா மந்திரிக்கு வங்க ஹிந்துக்களின் தந்தி

வங்காளத்தில் முஸ்லீம் மெஜாரிடி காரணமாக மந்திரிகள் ஹிந்துக்களுக்கு பலவித தீங்குகள் செய்து வருவதால் உடனே மாகாண அரசியலை ரத்து செய்து கவர்னர் ஆக்ஷியை ஏற்படுத்த வேணுமென்று வங்க ஹிந்துக்கள் இந்தியா மந்திரிக்கு அவஸரத் தந்தி யொன்று அனுப்பியுள்ளார்கள்.

ஆத்ரேய ரஸாயனம்.

நாடி நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சரீரபுஷ்டியைச்செய்யும் அசதி களைப்புச்சோர்வுகளை உடனே நிவர்த்திசெய்யும். நல்ல பசி எடுக்கும். இழந்த பலத்தை திருப்பி அளிக்கும். உத்தம ரஸாயனம்.

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சிணப்பள்ளி

ஸ்தாபகர்:-
V. B. நடராஜசாஸ்திரி,
ஆயுர்வேதாசார்ய (Reg l)

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியா மருந்து
இதுவே.
ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்



தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே!

எஸ். கே. விஸ்வேச்வர சாஸ்திரிகள், மாஜி ஸ்கூல் இன்ஸ்பெக்டர், கும்பகோணம்.

[சென்ற வாரத் தொடர்ச்சி]

இரண்டு நாள் கழித்து ஜமீன்தார் ஏஜண்டுமூலமாய், கிருஷ்ணனைவரவழைத்து ஐயா பாரும் என் கையை, நீர் கொடுத்த மோதிரம் அணிந்திருக்கும் கையை என்று நன்றாய் எடுத்துக்காட்டி எவ்வளவு அழகாய் காந்தி அடிக்கிறது? இந்த ஒரு விரல் மோதிரமே இப்படிச்செய்தால் இன்னும் மூன்று விரல்களுக்கும் போட்டுக்கொண்டால் எப்படி இருக்குமோ? யார் சொல்ல முடியும்? போட்டுப்பார்த்தால்தான் தெரியும் என்றார். உம்மை எதற்காக வரவழைத்தேன் தெரியுமா? இதற்காகத்தான். இதே மாதிரி இன்னும் மூன்று மோதிரங்கள் கொண்டு வாரும் ஒரு மாதத்தில். அதற்கு உள்ள விலை கொடுக்கப்படும். மனைவியும் நன்றாயிருக்கிறதென்று சொன்னால் அப்போது இனாமும் கிடைக்கும என்றார் ஜமீன்தார்.

அதற்கு கிருஷ்ணன், பிரபுவே, என்னிடம் இருந்தது இந்த ஒரு மோதிரமே இன்னும் மூன்று வேண்டும் என்றால் நான் எங்கே போவேன்? இது என்னால் முடியாத காரியம் என்று மிகப்பணிவாய்ச் சொல்லிக்கொண்டான் அதற்கு ஜமீன்தார் கோபத்தோடு என்னய்யா! நான்யார் தெரியுமா? இவ்வூரில் இருப்பவர்களுக்குள் முதல் ஜமீன்தார் வருஷம் ஒன்றுக்கு ஐந்து லட்சம் ரூபாய்வரும்படி உள்ளவன் எனக்கு எவ்வளவு அதிகாரம் இருக்கிறதென்று உமக்குத் தெரியாது. இப்போது நீர் ஒடுக்கத்துக்குக் கொண்டு போகப்படும்படி என்னால் கட்டளை இடப்பட்டால் உம்மை அங்கே என்ன செய்வார்கள் தெரியுமா? உம்மைச் சித்திரவதை செய்து, பிறகு உம்மால் ஆக வேண்டிய காரியம் பலிக்காவிட்டால், இருக்கிற இடம் தெரியாமல் உயிரோடு புதைத்துவிட்டு, இடம் தெரியாதபடி அதன் மேல் பயிரான மரத்தையும் வைத்து விடுவார்கள் ஜாக்கிரதை: இப்போது ஒப்புக்கொண்டு போய், தலை மறைவாய் ஓடிவிடலாம் என்று எண்ணுவீரோ? தக்கபடி புலன் வைத்து உம்மைப்பிடித்துத் தலையை வாங்கி விடுவேன். சொன்னபடி 30 நாளில் மோதிரங்கள் கொண்டு வந்தால் பணம் பெறுவீர். இல்லையானால் பிணமாவீர்! கபர்தார்! பார்த்துப்பிழையும்! யாரய்யா ஏஜண்டு இவனுக்கு உத்திரவு இடும் என்றார் ஜமீன்தார். ஏஜண்டும் உடனே ஏனென்று வந்து கிருஷ்ணனைப் பார்த்து இன்னும் 30 நாளில் 3 மோதிரங்கள் கொண்டு வாரும் தவறினால் உம் தலைக்கு ஆபத்து! தெரிந்ததா? என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

கிருஷ்ணன் இன்னது செய்வது என்று தெரியாமல் ஏக்க முற்றான். வெகு துக்கத்தோடு பின்வரும் விதம் யோசித்தான். ரங்கனைப் போய்ப் பார்ப்போம் என்றால் அவன் முகத்தில் நான் எப்படி விழிப்பேன் நானே அவனை மோசம் செய்தவன். இரு தலைக்கொள்ளி எறும்பு போலாயிற்றே என் கதி. இந்தத் திண்டாட்டத்திற்கு என்செய்வது. ஒரு வழியும் தோன்றவில்லையே. ஒரு மாதம் போனால் நான் எங்கிருந்தாலும் என் உயிருக்காபத்து. ஒரு வேளை ரங்கன் ஒரு பெரிய மகான் என்று இப்போது சந்தேகிக்கிறேன். நான் அவனைச்செய்த மோசம்தான் என்னை இப்படித் தவிக்கச்செய்கிறதோ. அவன் ஒரு சமயம் ஏதாவது தெய்வ வரப்ரஸாதம் பெற்றவனாயிருப்பானோ என்றும் தெரியவில்லை? அவனிடமே போய், நடந்ததைச்சொல்வேன். ஆனது ஆகட்டும் நான் உண்மை பேசினதற்காக என்னை அவன் ஒரு மகானாயிருந்து மன்னிக்கலாகாதா? என் தலை விதிப்படி ஆகிறது. என்றெல்லாம் எண்ணி அந்த நாவித ரங்கனிடமே கிளம்பினான்' 'திறனல்லதற் பிறர் செய்யினும் அறனல்ல. செய்யாமை' என்பதைக் கடைப்பிடித்தரங்கனிடம் போய் நடந்ததைச் சொல்லி மிகவும் வேண்டிக்கொண்டு தயவுசெய்து உயிர்ப்பிச்சை கொடுக்க வேண்டும், இன்னும் மூன்று மோதிரங்கள் கொடுத்து, என்று மன்றாடினான். அதற்கு ரங்கன் புன்சிரிப்போடு அந்தப் பைசாவை கங்காதேவி கையில் கோடுத்தீரா? என்றான் கிருஷ்ணன், நான், சொன்னபடியே கொடுத்தேன்: பிறகு நடந்ததை எல்லாம் சொல்லிவிட்டேன். என்னை மன்னித்து உயிர்போகாமல் இருக்க கிருபை செய்து மூன்று மோதிரங்கள் அருள வேண்டும் என்றான் வெகு வினயமாய் கிருஷ்ணன் மறுபடியும். செயற்கரிய செய்வார் பெரியர் என்ற புலவர் சொற்படி ரங்கன் பெருந்தன்மையோடு இதோபாரும் என் ஆயுதங்கள் வைக்கும் தகரப்பெட்டியை பெட்டியின்மேல் கை வைத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு பெட்டியைத் திறந்து கையைவிட்டு, வேண்டிய மோதிரங்களை எடுத்த பிறகே கண்ணைத் திறந்துபாரும் என்றான். அதற்கு கிருஷ்ணன் எனக்கு அதிகம் வேண்டாம் மூன்றே போதும் என்று சொல்லிக்கொண்டே பெட்டியின் எதிரேவந்து ரங்கன் சொன்னபடியே பயத்தோடும் கவலையோடும் கண்ணை மூடிப் பெட்டிக்குள் இருந்து மூன்று மோதிரங்கள் மட்டுமே எடுத்து வெகு ஆவலோடு கண்ணைத் திறந்து பார்த்தான்.

வெகு ஆச்சரியம் சந்தோஷம் அடைந்து ரங்கனிடம் வெகு வணக்கமாக விடைபெற்றுக் கொண்டு முகமலர்ச்சியோடு ஜமீன்தாரிடம் விரைந்து வந்து கொண்டிருந்தான் கிருஷ்ணன்.

முகவாட்டம் நீங்கித்தன் வரவை ஜமீன்தாருக்கு அறிவித்தான் ஏஜண்டு மூலமாய் ஜமீன்தாரும் வந்து மோதிரங்களை வாங்கி அணிந்து பார்த்து ஒவ்வொரு விரலுக்கும் தக்கபடி அமைந்திருப்பதைக்கண்டு ஆனந்தமடைந்து மோதிரத்தினிடம் பரவசமாய் கிருஷ்ணனிடம் பேச ஆரம்பித்தார. இவைகளை யாரிடம் வாங்கி வந்தாய்? என்றார் ஜமீன்தார்.

கி:-பிரபுவே, 15 மயிலுக்கப்பாலுள்ள ஒரு ஊரில் வாரன் ஜாதியான் ரங்கன்என்று ஒருவன் உண்டு. அம்பட்டத்தொழில் அவனிடமே இந்த நான்கு மோதிரங்களையும் வாங்கி வந்தேன்

(முதல் கிடைத்த ஒன்றும் ரங்கன் மகிமையால் கிடைத்ததால் இம்மூன்றோடு அதையும் சேர்த்து நான் கென்றானே யொழிய பொய் சொன்னதாகக் கொள்ள வேண்டா)

ஜ:-என்னை மோதிரம் கொடுத்தவனிடம் அழைத்துப் போவாயா?
கி. உத்திரவுப்படியே.

ஆனால் கிளம்பு பல்லக்குத்தயாராகட்டும் கிருஷ்ணனுக்கு ஒரு வண்டியும் இரண்டும் சித்தமாகவே ஜமீன்தார் கிருஷ்ணனைப் பார்த்து அந்த இடத்திற்கு இரண்டு பர்லாங்கு தூரத்திலே இறங்கிவிட வேண்டும் என்றார். சரி என்றான்.

தொடரும்.

Printed by S. Kalyansundarm, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopladesikachariar, and S. Kalyanasundaram.